# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,911—1970 ජූනි 18 වැනි බ්‍රහස්පතින්දා—1970.6.18

14,911 ம் இலக்கம் 1970 ம் ஆண்டு யூன் மாதம் 18 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 515 | ஆளவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 522 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 524 | அந்நிய குடியகல்வு உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 528 | நானாவித அறிவித்தல்கள் | — |


### பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

*1. படிகள்*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.


**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

அரசாங்க அச்சகக் கந்தோர்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வென்வுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது

---

## வன திணைக்களம்

### வேலைத்தல முகாரியின் பதவி

வன திணைக்களத்தின் ஆராய்ச்சிக் கல்விக் கிளையில் ஓர் வேலைத்தல முகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்பப்பட்டு வன பாதுகாவல் அதிபர், த. பெ. இல. 509, கொழும்பு 2, என்ற விலாசத்துக்கு 1970 ம் ஆண்டு யூலை மாதம் 4 ம் திகதியோ அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பள விகிதம்.— இப்பதவிக்கான திரட்டிய சம்பளம் ரூபா 4,152—144 × 16—6,456 ஆகும்.

3. தேவைப்படும் தகைமைகள் :—

(அ) விண்ணப்பதாரர் 20 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாடு ஏனைய தகைமைகளைப் பெற்றிருக்கும் இத் திணைக்கள ஊழியரைக் கட்டுப்படுத்தாது.

(ஆ) (1) தூய கணிதமும் பௌதிகமும் பாடமாயமைந்த சிரேட்ட தராதரப் பத்திரமோ அல்லது அதே போன்ற தராதரமுடையராகவும் (பொறியியல் விஞ்ஞானத்திலோ அல்லது பிரயோக கணிதத்திலோ சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை காட்டப்படும்).

(2) கனிட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் உடையவர் (கட்டுப்பெத்தையிலுள்ள இலங்கைத் தொழில்நுட்பமுறைக் கழகத்தின் செயல்முறைத் தொழில்நுட்பக் கல்லூரியின் பொறிமுறை அல்லது மின்சார எந்திரவியல்)

அல்லது

அம்பாறையிலுள்ள காடி சிரேட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தகுதித் தேர்வுப் பத்திரம் (பொறிமுறையும் மின்சாரமும்) உடையவர்.

அல்லது

கல்வி அமைச்சின் ஏதாவது ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில் பொறிமுறையிலும் மின்சார எந்திரவியலிலும் மூன்று வருடமாக மாலைப் படிப்பைத் திருப்திகரமாக முடித்த சான்றிதழ் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. சேர்வு நியதிகள்.—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரிமையானதுமாகும்.

5. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களோடு கீழ்க்காணும் பத்திரங்களின் பிரதிகள் (மூலப் பிரதிகளல்ல) இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானம் செய்யும்போது கொடுக்கும் பத்திரங்களும் உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய விதிகட்கு அமையக் கொடுக்கப்படும் பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) கல்வித் தகைமைகளின் சான்றிதழ்கள்.

(இ) விண்ணப்பதாரரின் குணம், பதவிக்குப் பொருத்தம் பற்றிய சமீபத்தில் பெறப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இச் சான்றிதழ் சமர்ப்பிக்கும்படி கோரப்படமாட்டார்கள்).

6. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ம் பகுதி, II ம் தொகுதி ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

7. குறிப்பிட்ட திகதிக்குப் பின் வந்து சேரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

8. விண்ணப்பங்களோ அன்றி இப்பதவி பற்றிய வேறு எவ்விதக் கடிதத் தொடர்புகளோ பதில் வன பாதுகாவல் அதிபருக்கே அனுப்பப்பட வேண்டும். இத் திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவருக்காவது தனிப்பட்ட விலாசத்திற்கு அனுப்பக்கூடாது.

டபிள்யூ. ஆர். எச். பெரேரா,
பதில் வன பாதுகாவல் அதிபர்.

வன பாதுகாவல் அதிபரின் அலுவலகம்,
த. பெ. இல. 509,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு. ஜூன் மீ 9 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் (தடித்த எழுத்தில்) :———.
2. விலாசம் :————.
3. பரம்பரையாக இலங்கையரா அல்லது பதிவால் இலங்கையரா :———
4 (அ) பிறந்த திகதி :————.
(ஆ) 1970 யூலை 4 ம் திகதி வயது :—
வருடங்கள் :———— மாதங்கள் :————
5. தற்பொழுது ஏதாவது பதவியிலிருந்தால் அதன் விபரம் :————.
6. கல்வித் தகைமைகளும் அனுபவமும் :————.
7. சிறப்புத் தகைமைகள் ஏதும் இருப்பின் அவை :————.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

6–445—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பகுதிநேர அறிவிப்பாளர்கள்—தேசிய சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளர் பதவிகளுக்கு (தமிழ்) விண்ணப்பங்கள் இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன. அமையத்துக்குரிய அடிப்படையில் அவர்கள் சேவை பெறப்படும். ஆகக்கூடிய சன்மானமாகத் தினமொன்றிற்கு ரூபா 20 க்கு அதிகரிக்காது மணித்தியாலமொன்றிற்கு ரூபா 2.50 வீதம் ஊதியம் வழங்கப்படும். பிரயாணச் செலவுகளோ, ஏனைய படிகளோ வழங்கப்படமாட்டா.

2. சன்மானமின்றி குறுகிய காலப் பயிற்சிக்கு விண்ணப்பதாரர்கள் உட்படவேண்டி ஏற்படும்.

3. பகுதிநேர அறிவிப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தாபனத்தின் கிரமமான ஊழியர்களாகக் கருதப்படமாட்டார்கள். தேவைப்படும் காலங்களிலும், தேவைப்படும்பொழுதும் அவர்கள் அழைக்கப்படுவார்கள்.

4. விண்ணப்பதாரர்களின் வயது 18 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது உயர் பரீட்சையில் அவர்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சிங்கள மொழியில் சுமாரான அறிவிருத்தல் மேலதிகமான தகைமையாகக் கருதப்படும். ரொறிங்ரன் சதுக்கத்திலுள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலுவலகத்திலிருந்து 6 மைல் சுற்று வட்டாரத்தினுள் விண்ணப்பதாரர்கள் வசித்தல் வேண்டும்.

5. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ம் திகதிக்குப் பிந்தாமல் கொழும்பு 7, ரொறிங்ரன் சதுக்கம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், மா அதிகாரி என முகவரியிடப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. உறையின் இடதுகோடித் தலைப்பில் "பகுதிநேர அறிவிப்பாளர்கள் பதவி (தமிழ்)" என்று தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டா.

கவில் குமார் முனசிங்க,
மா அதிகாரி,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 9 ந் உ.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

#### பகுதிநேர அறிவிப்பாளர் பதவி (தமிழ்)

1. முழுப் பெயர் :————.
2. நிரந்தர தபால் முகவரி :————.
3. பிறந்த திகதியும், இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. 30.6.70 இல் சரியான வயது :—
வருடங்கள் :———— மாதங்கள் :———— நாட்கள் :————
5. தேசிய இனம் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
7. தேர்ச்சித் தராதரம் (அ) தமிழ் :————.
(ஆ) சிங்களம் :————.
(இ) ஏனைய மொழிகள் :————.
8. ஒலிபரப்பு அனுபவம் மற்றும் வேறு விசேஷ கோரிக்கைகள் பற்றிய விபரங்கள் :————.
9. நற்சான்றிதழ்கள் பெறப்பட்டவர்களின் பெயர்களும், முகவரிகளும் :————.
(பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
10. தற்போதைய, முன்னைய ஊழியம் ஏதும் இருந்தால் அவை பற்றிய விபரங்களும் தொழிலில் ஈடுபட்ட திகதியும் :————.

————,
திகதி :————. கையொப்பம்.

6–489—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

## கிறுலப்ரேட் "ஏ" தர உப அஞ்சல் அதிபருக்கான பதவி

கொழும்பு 5, கிறுலப்ரேட் உபஅஞ்சல் அலுவலக உபஅஞ்சல் அதிபர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக்குறைந்த மாதாந்த அலவன்சு ரூபா 75 ஆகும்.

(1) விண்ணப்பதாரர் இலங்கையராயும், 18.7.70 ந் திகதியில் 21 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராயும் இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2) நகரசபைப் பிரதேசத்தில் நிரந்தர வாசியாக 10 வருடத்திற்கும் அதற்குக் கூடுதலாயும் இருத்தல் வேண்டும். உபஅஞ்சல் அலுவலகம் வீற்றிருக்கும் வட்டாரத்தில் அல்லது அடுத்த வட்டாரங்களில் உள்ள வாசியாயிருப்பின் முன்னுரிமை கொடுக்கப்படும்.

(3) சி. பா. த. ப./பொ. த. ப. (சாதாரணம்) பரீட்சையில் குறைந்தளவு 3 பாடங்களுடன் சிங்களம்/தமிழ் பாஷை, கணிதம்/ஆரம்பகணிதம் ஆகியவற்றுடன் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

(4) நாராயன்பிட்டியிலுள்ள புதிய தொழிற் செயலகக் கட்டிடத்தில் கிறுல ரேட் உபஅஞ்சல் அலுவலகத்தை நிறுவுவதற்கு ஒரு உகந்த இடம் கொடுக்கப்படும். இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெறும் உபஅஞ்சல் அதிபர் இதற்குரிய வாடகையைச் செலுத்தல் வேண்டும்.

(5) கொழும்பு 1, எச்சலன் சதுர்க்கம், 5 ம் கட்டிடத்தில் உள்ள (மேல்தென்) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்ற அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் அவரை 18.7.70 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ அடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தேவைப்படின், மேலதிக விபரங்கள் அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேணன் அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப்போக்குவரத்து அதிபரும்.

6–381—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

## நெடிமாலா " ஏ " தர உப அஞ்சல் அதிபருக்கான பதவி

தெகிவளை-கல்கிசை மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் நெடிமாலா உபஅஞ்சல் அலுவலகத்திற்கு உபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக்குறைந்த மாதாந்த அலவன்சு ரூபா 75 ஆகும்.

(1) விண்ணப்பதாரர் இலங்கையராகவும் 18.7.70 ந் திகதியில் 21 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராயும் இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2) நகரசபைப் பிரதேசத்தில் நிரந்தர வாசியாக 10 வருடத்திற்கும் அதற்குக் கூடுதலாயும் இருத்தல் வேண்டும். உபஅஞ்சல் அலுவலகம் வீற்றிருக்கும் வட்டாரத்தில் அல்லது அடுத்த வட்டாரங்களில் உள்ள வாசியாயிருப்பின் முன்னுரிமை கொடுக்கப்படும்.

(3) சி. பா. த. ப./பொ. த. ப. (சாதாரணம்) பரீட்சையில் குறைந்தளவு 3 பாடங்களுடன் சிங்களம்/தமிழ் பாஷை, கணிதம்/ஆரம்பகணிதம் ஆகியவற்றுடன் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

(4) நெடிமாலா உபஅஞ்சல் அலுவலகத்தை நிறுவுவதற்கு ஒரு தகுந்த கட்டிடத்தை விண்ணப்பதாரர் வாடகையின்றி வழங்கல் வேண்டும்.

(5) கொழும்பு 1, எச்சலன் சதுக்கம், 5 ம் கட்டடத்தில் உள்ள (மேல்தென்) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்ற அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பூர்த்திபாக்கப்பட்ட விண்ணப்பங்கள் அவரை 18.7.70 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ அடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தேவைப்படின், மேலதிக விபரங்கள் அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேணன் அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

6–382—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## டீ சொய்சாவத்தை " பி " தர உப அஞ்சல் அதிபருக்கான பதவி

தெகிவளை-கல்கிசை மாநகரசபை எல்லைக்குள் தெம்பிளஸ் வீதியிலுள்ள கங்கதற மாவத்தைச் சந்திக்கு அண்மையில் " டீ சொய்சாவத்தை " என்னும் பெயருடன் திறக்கப்படவிருக்கும் ஒரு உபஅஞ்சல் அலுவலகத்திற்கு உபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக்குறைந்த மாதாந்த அலவுன்சு ரூபா 75 ஆகும்.

(1) விண்ணப்பதாரர் இலங்கையராயும், 18.7.70 ந் திகதியில் 21 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராயும் இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2) நகரசபைப் பிரதேசத்தில் நிரந்தரவாசியாக 10 வருடத்திற்கும் அதற்கு கூடுதலாயும் இருத்தல் வேண்டும். உபஅஞ்சல் அலுவலகம் வீற்றிருக்கும் வட்டாரத்தில் அல்லது அடுத்த வட்டாரங்களில் உள்ள வாசியாயிருப்பின் முன்னுரிமை கொடுக்கப்படும்.

(3) சி. பா. த. ப./பொ. த.ப. (சாதாரணம்) பரீட்சையில் குறைந்தளவு 3 பாடங்களுடன் சிங்களம்/தமிழ் பாஷை, கணிதம்/ஆரம்ப கணிதம் ஆகியவற்றுடன் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

(4) டீ சொய்சாவத்தையில் உபஅஞ்சல் அலுவலகத்தை நிறுவுவதற்கு ஒரு தகுந்த கட்டிடத்தை விண்ணப்பதாரர் வாடகையின்றி வழங்கல் வேண்டும்.

(5) கொழும்பு 1, எச்சலன் சதுக்கம், 5 ம் கட்டடத்தில் உள்ள (மேல்தென்) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்ற அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் அவரை 18.7.70 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ அடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தேவைப்படின், மேலதிக விபரங்கள் அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும்.

6–383—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## காலி மாவட்டம், கங்கபொடபத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதியில் உடுகம கிராமசபைப் பிரதேசத்துக்கு சடுதி மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமித்தல்

காலி மாவட்டம், கங்கபொட பத்துக் காரியாதிகாரியின் பகுதியில் உடுகம கிராமசபைப் பிரதேசத்துக்கு சடுதி மரண விசாரணை அதிகாரி பதவிக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஆதாரமாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 1970 ஜுன் மாதம் 30 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கங்கபொடபத்து வடக்குக் காரியாதிகாரிக்குக் கிடைக்கக்கூடியதாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

" பிரிவுக்காரியாதிகாரி, கங்கபொடப்பத்து வடக்கு, நாகொட ".

2. இப்பதவி வேதனமற்றது. ஆயினும் மரண விசாரணை ஒன்றுக்கு ரூபா 7.50 படியாக வழங்கப்படும்.

3. வேண்டிய தகைமைகள்.—

(அ) நல்லொழுக்கமும், நற்சுகதேகியுமானவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) காலி மாவட்டம், கங்கபொடபத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதியில் உடுகம கிராமசபைப் பிரதேசத்தில் நிரந்தரமாய் வசிப்பவராயிருத்தல் வேண்டும்.

(இ) (1) 1925 க்கும் 1944 க்கும் இடைப்பட்ட காலத்துள் பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள பாஷையுடன் கல்வித் திணைக்களத்தின் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில், அல்லது

(2) சிங்கள பாஷையுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு உயர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமையை நிரூபிப்பதற்கு அத்தாட்சிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) அரசாங்கத்தில் அல்லது ஸ்தல ஸ்தாபன அலுவலகங்களில் கடமையாற்றுபவரல்லாதிருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதியன்று 3 வயதுக்குக் குறையாதவராயும் 60 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பத்திரங்களின் பிரதிகளையும் அனுப்பிவைத்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்,

(ஆ) பெற்றுள்ள உயர்தகுதி சம்பந்தமான பத்திரம்,

(இ) நடத்தை சம்பந்தமாகச் சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரு அத்தாட்சிப் பத்திரங்கள்.

5. விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

பீ. எ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

1970 ம் ஆண்டு மே மீ 15 ந் உ.

### மாதிரி விண்ணப்பப்பத்திரம்

**காலி மாவட்டம், கங்கபொடபத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதியில் உடுகம கிராமசபைப் பிரதேசத்துக்கு சடுதி மரண விசாரணை அதிகாரி பதவி**

1. விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும் (தெளிவான எழுத்தில்): ————.

(அ) முதலெழுத்துக்களின் பெயர் : ————.

(ஆ) வேறு பெயர்கள் : ————.

2. நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசித்த காலமும் : ————.

3. 1970 ஜுன் மாதம் 30 ந் திகதிக்கு வயது :—
வருடம் : ———— மாதம் : ————. நாள் : ————.

(அ) பிறந்த திகதியும் இடமும் : ————.

4. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? : ————.

5. கல்வித் தராதரங்கள் : ————.

6. தற்போதைய தொழில் : ————.

7. கடன் தொல்லைகள் உண்டா ? அவ்வாறாயின் அதன் விபரங்கள் : ————.

8. விண்ணப்பதாரிக்குச் சொந்தமான சொத்துக்களும் அவற்றின் பெறுமானமும் : ————.

9. விண்ணப்பதாரி ஏதாவதொரு குற்றச் சாட்டின்பேரில் தண்டனை பெற்றவரா ? : ————.

10. இப்பதவியின் பொருட்டுள்ள வேறும் உரிமைகளின் விபரங்கள் ————.

11. இதற்கு முன்னர் உத்தியோகம் பார்த்ததுண்டா ? அவ்வாறாயின் விபரங்கள் : ————.

12. ஸ்தல ஸ்தாபன அவைகளில் நீர் ஒரு அங்கத்தவரா ?

————

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

6-366—18.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,911.

---

## அரசாங்க விநியோகத் திணைக்களம்

### குதப் பொறுப்பாளர் பதவி

அரசாங்க விநியோகத் திணைக்களத்திலுள்ள குதப் பொறுப்பாளர் பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்த் தரப் பட்ட மாதிரிவிண்ணப்பப் பத்திரத்தில், 1970 ம் ஆண்டு ஜுலை மாதம் 7 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக " அதிபர், அரசாங்க விநியோகத் திணைக்களம், த. பெ. இல. 418, கொழும்பு–2" என விலாசமிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

2. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்கான ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் : வருடத்துக்கு ரூபா 3,864—18 × 144—ரூபா 6,456.

3. **நியமன நிபந்தனைகள்.**— பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரிமையுடையதுமாகும். கைம்பெண் அநாதை இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்துக்கு கட்டணம் செலுத்தல் வேண்டும்.

4. **தேவைப்படும் தகைமைகள்**

(i) சிரேஷ்ட பாடசாலைத் தாரதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது பொதுக்கல்வித் தராதரப்பத்திரப் பரீட்சையில், இருதடவை களுக்கு மேற்படாது, சிங்களம்/தமிழ் பாஷையும் எண் கணிதமும் உட்பட குறைந்தது ஆறுபாடங்களிலாவது சித்திய டைந்திருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமானமான தோ உயர்தரமானதோவான பரீட்சையொன்றில் சித்திய டைந்திருத்தல் வேண்டும்.

(ii) பொதிகள் கட்டுவதிலும், அவற்றை அனுப்புவதிலும் போதிய அனுபவம்.

குறிப்பு :—மேலே பகுதி (ii) ல் கொடுக்கப்பட்ட தகைமையை உடையவரும், கனிஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமானமான பரீட்சையொன்றில் சித்தியடைந்தவரு மான, ஏற்கெனவே ஐந்து வருடங்களுக்குக் குறையாத காலம் அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் இப்பத விக்கான தமது விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பலாம்.

(iii) விண்ணப்பதாரர் 1970.7. 7 ம் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவரையும் இருத்தல் வேண்டும். இக்கட்டுப்பாடு அரசாங்க சேவையில் உள்ளவர் களுக்கு நீக்கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்.**—அரசாங்க சேவையில், அரசகரும மொழிக் கொள்கைகளுக்காகப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தராயிருந்தால்.

(அ) (i) தகுதி காண் காலம் 3 வருடங்களாக இருக்கும்.
குறிப்பு :—அரசாங்க சேவையில் நிரந்தரபதவியை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரது நியமனம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பதில் நியமன மாகக் கருதப்படும்.

(ii) நியமனதாரர், அரசாங்கத்தின் அரசகருமக் கொள்கைகள் சம்பந்தமாக ஏற்கெனவே நடைமுறையிலிருக்கும் பிரமாணங் களுக்கும் அத்தோடு மேன்மேலும் வரவிருக்கும் பிரமாணங் களுக்கு ஒழுகக்கட்டுப்பட்டு நடப்பதுடன் 1956ம் ஆண்டின் 33ம் இலக்க அரசகரும மொழிக் கொள்கையை அமுல்நடத்த வும் உதவ வேண்டும்.

(iii) தகுதிகாண் காலத்தில் சிங்கள மொழியில் தகைமை பெற வேண்டும்.

(iv) குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட சிங்கள மொழித் தகைமைப்பரீட்சையில் சித்தியெய்தலைப் பொறுத்தே நிய மனம் நிரந்தரமாக்கல் நடைபெறும். குறித்த கால எல்லை யுள் குறித்த தரத்தில் சித்தியெய்தத் தவறின் ஆண்டுச் சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்படுவதுடன் கொடுக்கப்பட்டகால எல்லைக்கு மேலும் 6 மாதகாலம் அவகாசம் தரப்படும். இக்கால எல்லைக்குள்ளும் வேண்டிய தரங்களில் சித்தி பெறத்தவறுமிடத்து இடைநிறுத்தம் மீண்டும் சித்தியெய்தும் வரையும் நிறுத்தமாக மாற்றப்படும்.

(v) தகைமைகாண் கால எல்லைக்குள் குறிப்பிட்ட சிங்கள மொழிப் பரீட்சையில் வேண்டிய தராதரத்தை அடையத் தவறுமிடத்து நிருவாகப்பிரமாணம் 120 ம் 121 க்கும் அமைய நடவடிக்கை கள் எடுக்கப்படும். (நிபந்தனைகள் (iii), (iv), (v), ஆகியன தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேவையில் சேர்க்கப் பட்டவர்களுக்கு மாத்திரம் பொருந்துவதாகும்)

(ஆ) (i) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் பிணைப்பணமாக ரூபா 1000 செலுத்துமாறு வேண்டப்படுவர்.

(ii) அவர் தீவின் எப்பகுதியிலும் கடமையாற்ற வேண்டியவராவர்.

6. **திறமைகாண் பரீட்சை.**— பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட் சார்த்தி தமது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதிகதியிலிருந்து இரு வருட கால எல்லைக்குள், ஒரு குறிப்பிட்ட, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்தி ரப் பரீட்சைக்குச் சமானமான சிங்களமொழியில் திறமைகாண் பரீட்சை யில் சித்தியெய்துமாறு கேட்கப்படுவார். இப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறின் ஆண்டுச் சம்பள ஏற்றம் பின்போடப்படலாம்.

7. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் இணைக்கப்படவேண் டிய பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) :

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானப் பத்திரமோ அல்லது உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணங்களுக்காக விநியோ கிக்கப்பட்ட பத்திரமோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)

(ஆ) பெற்ற மிகக்கூடிய தராதரத்துக்கான சான்றிதழ்.

(இ) அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள். (அரசாங்க சேவை யில் ஏற்கெனவே உள்ள விண்ணப்பதாரர்கள் இவ் உபபிரிவில் கோரப்பட்டிருக்கும் ஒழுக்கச்சான்றிதழ்கள் இணைத்தனுப்பவேண் டியதன்று)

8. ஏற்கெனவே அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் இப்பதவிக்கான விண்ணப்பங்களை அனுப்புமிடத்து அவற்றைத் தமது திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்புதல் வேண்டும். முடிவுதிகதிக்கு முன்பதாகவே விண்ணப்பதாரர் தமதுவிண்ணப்பத்தைத் தம்மிடம் சமர்ப்பித்தமைக்கான அத்தாட்சியுடன் தாமதமேற்பட்டமைக்கான போதிய காரணத்தையும் திணைக்களத் தலைவர் குறிப்பிட்டுத் தமது சிபாரிசுடன் அனுப்பினாலன்றி முடிவுதிகதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவும் கவனத்துக் கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

9. இவ் வர்த்தமானியில் பகுதி Iன் பிரிவு IIல் தொடக்கத்தில் அர சாங்க சேவையில் பதவி நியமனங்கள் சம்பந்தமாகப் பிரசுரிக்கப்பட்டி ருக்கும் பொது நிபந்தனைகள் தொடர்பாக கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அரசாங்க விநியோக அதிபர்.

## மாதிரி விண்ணப்பப்பத்திரம்

### குதப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)
(அ) குடும்பப் பெயர் :————.
(ஆ) வேறு பெயர்கள் :————.

2. தபால் முகவரி :————.
(அ) வதிவிடம் :————.
(ஆ) அலுவலகம் :————.

3. 1970.7.7.ல் வயது :————.
(பிறப்பத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.)

4. (அ) இலங்கைப் பிரசையா என அறியத்தரவும் :————.

(i) பிறப்பால் :————.

(ii) பதிவால் :————.

(ஆ) பிறப்பிடம் :————.

(i) விண்ணப்பதாரர் :————.

(ii) விண்ணப்பதாரரின் தந்தை :————.

(iii) விண்ணப்பதாரரின் பேரனுர் :————.

குறிப்பு :—விண்ணப்பகாரரும் விண்ணப்பகாரரின் தந்தையும் இலங்கையில் பிறந்தவராயிருந்தால் பிரிவு (i)ம் (ii)ம் மாத்திரம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரரோ அல்லது விண்ணப்பதாரரின் தகப்பனுரோ இலங்கையில் பிறந்திராவிடில் மேலே உள்ள பிரிவு (i), (ii), (iii), ஆதியன நிரப்பப்படவேண்டும்.

5. கல்வியும் மற்றும் தகைமைகளும் :—

(அ) சித்தியெய்திய உயர்தரம் :————.
(சான்றிதழின் பிரதி ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.)

(ஆ) அனுபவம் :————
(அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்).

(இ) பதவியுடன் சம்பந்தமான வேறு ஏதாவது தகைமைகள் உண்டாயின் அவற்றைத்தருக :————.

6. நற்சான்றிதழ் பெறப்பட்டவர்களின் பெயர்களும், விலாசங்களும்: ————.

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

என்னுல் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். விபரங்களில் யாதாயினும் பிழைகளோ சரியின்மையோ இருக்கக்கண்டுபிடிப்பின் தகைமையற்றவனுகக் காணப்பட்டு தேர்வு பெறமாட்டேனென்றும், நியமனத்தின் பின்யாதாயினும் பிழைகள் கண்டுபிடிப்பின் எதுவித சகாயமுமின்றி வேலைநீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் நன்கறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

6–374—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## பொருட் கொள்வனவுப் பகுதி

**மட்டக்குளியா மத்திய பண்டசாலை தலைமை டிப்போ அதிகாரிப் பதவி**

பொருட் கொள்வனவுப் பகுதியிலுள்ள மேலே கூறப்பட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே காணப்படும் மாதிரிப் பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்படவேண்டிய விண்ணப்பப் பத்திரங்கள் பொருட் கொள்வனவுக் கமிஷனர், 4 வது மாடி, மில்லேஸ் கட்டடம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 1970 ம் ஆண்டு யூலை மாதம் 4 ம் திகதி அல்லது அதற்கு முன்னதாக அவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

1. **தேவையான யோக்கியதாம்சங்கள்.**—(அ) வயது : 1970 ம் ஆண்டு யூலை மாதம் 4 ம் திகதியில் 40 வயதிற்கு மேலாக இருத்தலாகாது. (இவ் வயதுக் கட்டுப்பாடு இலாக்காவைச் சேர்ந்த விண்ணப்பகாரரைப் பாதிக்காது).

(ஆ) **கல்வியும் மற்றும் தராதரங்களும்.**—கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழியும் பாடிக் கணிதம்/அட்சர கணிதம் அடங்கிய 6 பாடங்களில் இரு தடவைக்கு மேலாகாமல் சித்திபெறல் வேண்டும் ; அத்துடன்

(i) இரப்பரைத் தரம் பிரிக்கும் அறிவுடன் இலங்கை ஏற்றுமதிச் சரக்குகள் தரம் பிரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் அல்லது தரம் பிரிப்பதிலும் 15 வருட அனுபவம் இருக்க வேண்டும் ; அல்லது,

(ii) இரப்பரை மட்டும் தரம் பிரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் அல்லது தரம் பிரிப்பதிலும் மட்டும் 15 வருட அனுபவம் இருக்க வேண்டும்.

(iii) சிறந்த தார்மீக ஒழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருக்க வேண்டும்.

குறிப்பு . யே. எஸ். சி. பரீட்சைப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சைப் பத்திரமுடைய இலாக்காவைச் சேர்ந்த அபேட்சகர்கள், மேலே 1 (ஆ) (i) அல்ல ; (ii) ல் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குச்சரியாயிருந்தால், விண்ணப்பிக்கத் தகுதி உடையவராவர்.

2. **வேதனமும் அலவன்சும்.**—இப்பதவிக்குரிய ஒன்று கூட்டிய வேதன விகிதம் வருடமொன்றிற்கு ரூபா 6,600—8 × 180—8,040.

3. **சேவை நிபந்தனைகள்.**—பதவி தற்காலிகமானது. அரசாங்க சேவை சகாய நிதிக்குப் பணம் கட்டப்படும்.

4. (அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர், அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு புதியவராயின்,

(i) 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஷரத்துக்களை அமுல் நடத்துவதற்கும் இப்போது இருக்கும் சட்டங்களும் அல்லது மொழிக் கொள்கை சம்பந்தமாக இனிமேல் செய்யப்படும் சட்டங்களுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ii) அவருடைய நியமனம் முன்கூட்டியே நிறுத்தப்பட்டாலன்றி நியமனம் பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட, இரண்டு வருட, மூன்று வருட கால எல்லைக்குள், முதலாந்தர, இரண்டாம தர, மூன்றும் தர சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தி பெறல் வேண்டும்.

குறிப்பிட்ட காலத்தில் பரீட்சையில் சித்தி பெருவிடில் வருடா வருட சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்தப்படும். குறிப்பிட்ட கால எல்லையிலிருந்து 6 மாதத்திற்குள் சித்தி பெருவிடில், சித்தி பெறும்வரை நிரந்தரமாக நிறுத்தப்படும். மூன்றுவருட காலத்திற்கு மேற்பட்ட உத்தியோகம் அவர் மூன்றும் தர பரீட்சையில் சித்தி பெறுவதைப் பொறுத்திருக்கும். இப் பரீட்சைகளில் சித்திபெறுவதினுல் அவர் சேவையில் நீடித்து இருக்க அனுமதிக்கப்படுவாரென்று கருதப்படமாட்டாது.

(iii) அரசாங்க சேவை (பாதுகாப்பு) சட்டப் பிரமாணப்படி, தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர், வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தீர்மானிக்கும் தொகையையே அவர் குறிப்பிடும் விதத்தில் பாதுகாப்புப் பணமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) நிரந்தரமான பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர், புதிய ஒரு பதவிக்கு நியமிக்கும்பொழுது அவர் குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் அடிப்படையில் கடமையாற்றுவார்—1962 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ம் திகதிய 574 ம் இலக்க திறைசேரி சுற்றறிக்கைப் பிரகாரம்.

5. அபேட்சகர்கள், கீழே கூறப்படும் பத்திரங்களில் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் கேட்கும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும் —

(அ) பிறப்புப் பத்திரம் (**குறிப்பு.**—ஞானஸ்நான சான்றிதழோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கிணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) உயர்தரக் கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) இரப்பர் உற்பத்தியில் அல்லது தரம் பிரிப்பதில் அல்லது இவ்விரண்டிலும் உள்ள அனுபவம் சம்பந்தமான பத்திரங்கள்.

(ஈ) அண்மையில் பெற்ற, ஒழுக்கம் முதலியவற்றைக் காட்டும் இரு சான்றிதழ்கள் (அரசாங்க சேவையில் ஏற்கனவே இருப்பவர்கள் அத்தகைய நற்சாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தேவையில்லை).

6. இந்த அரசாங்க வர்த்தமானி முதற் பகுதி இரண்டாம் பிரிவில் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு உள்ள நியமனத்திற்கு ஏற்ற பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

தி. பத்மநாதன்,
பொருட் கொள்வனவுக் கமிஷனர்.

பொருட் கொள்வனவுக் காரியாலயம்,
தபால் பெட்டி 147,
மில்லேஸ் கட்டடம்,
கொழும்பு 1,
1970 ம் ஆல் ஜூன் மீ 2 ந உ.

**மட்டக்குளியா மத்திய பண்டசாலை தலைமை டிப்போ அதிகாரிக்குரிய மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

1. முழுப் பெயர் (தனித்தனி எழுத்தில்) : ————.

(அ) முதற் பெயர் : ————.

(ஆ) மற்றும் பெயர்கள் : ————.

2. தபால் விலாசம் : ————.

3. (அ) இனம் : ————.

(ஆ) இலங்கைப் பிரசையா அல்லவா : ————.

(i) வம்சாவளியால் : ————.

(ii) பதிவு செய்வதால் : ————.

4. (அ) பிறந்த திகதியும் 4.7.70 ல் உள்ள வயதும் : ————.
(பிறப்புப் பத்திர கொப்பி இணைத்தல் வேண்டும்)

(ஆ) கலியாணமானவரா அல்லாதவரா : ————.

5. சித்திபெற்ற கல்வி உயர்தர பரீட்சைகளும் சித்திபெற்ற பாடங்களும் (திகதிகளுடன்) : ————.

6. எங்கே கல்வி பயின்றது. பள்ளிக்கூடத்திலிருந்து விலகிய திகதி : ————.

7. அறிக்கையில் 1 (ஆ), (i) அல்லது (ii) குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் உள்ள அனுபவம் : ————.
(இந்த அனுபவம் சம்பந்தமான நகல் கொப்பி நற்சாட்சிப் பத்திரங்களை இணைக்கவேண்டும்)

8. சிங்களம் வாசிப்பதில், எழுதுவதில், விவாதிப்பதிலும் உள்ள திறமை : ————.

9. பள்ளிக்கூடம் விட்டபின் செய்த உத்தியோகங்களும் அவற்றின் திகதிகளும் முழு விபரங்களும் : ————.

10. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்தவர்கள் பெயர்களும் விலாசங்களும் : ————.

(மூலக் கொப்பிகளை இணைக்காது நகல் கொப்பிகளை இணைக்கப்பட வேண்டும்).

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையுமென இத்தால் நான் உறுதி யளிக்கிறேன். மேலே கூறப்பட்டிருக்கும் விபரங்களில் ஏதாவது பொய் யானால் அல்லது சரியானதல்லவாயிருத்தால், அதை நியமனத்திற்கு முன் கண்டுபிடித்தால் நான் தகுதியற்றவரென்றும் நியமனத்திற்குப் பின் கண்டுபிடித்தால் நான் வேலையிலிருந்து நஷ்ட ஈடொன்றுமின்றி நீக்கப்படுவேனென்றும் எனக்குத் தெரியும்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

6-475—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911.

---

எண். வெ. மு. 5/345

## கல்வி அமைச்சு

### யூனெஸ்கோவால் நடத்தப்படும் புத்தகப் பிரசுரிப்பு மேலாண்மைப் பயிற்சி நெறி

புத்தகப் பிரசுரிப்பு மேலாண்மையில் பயிற்சி நெறி ஒன்றினைப் பின் பற்றுதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் யூனெஸ்கோ இணையுரிமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கூட்டுப் பயிற்சி நெறி 1970 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 30 ஆந் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 26 ஆந் திகதி வரை இந்தியாவில் நியூ டெல்கியில் நடைபெறும்.

தத்தம் நாடுகளில் புத்தகக் கைத்தொழில் அபிவிருத்திக்கு சிறந்த சேவை புரியும் வகையில் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்களின் உயர்தொழில் தகுதியையும் பிரசுரிப்பு சம்பந்தமான பொது அறிவையும் வளர்த்தலே இதன் நோக்கமாகும்.

இதில் கலந்து கொள்பவர்கள் புத்தகங்கள் பிரசுரிக்கும் நிறுவனங் களுடன் தொடர்புபட்ட முகாமைப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப் பாளர்கள் போன்ற பிரதான பதவிகளை வகிப்பவர்களாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. வணிகத் தொடர்பற்ற முறையில் வளர்ச்சி, தகவல் சம்பந்தமான விடயங்களைக் கொண்ட புத்தகங்கள் அல்லது பாடப்புத்தகங்கள் அல்லாது தொழில்கள் பற்றிய பொதுப் புத்தகங்களின் வணிக நோக்கத்துக்கான பிரசுரங்களையே வெளியிடு பவர்களாக இருக்க வேண்டும். இப்பயிற்சி நெறியில் பிரசுரிப்புத் திட்டக் கமைகளுக்கே கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படுமாதலால் தினசரித் தொழிற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்களாக மட்டுமல்லாமல் எதிர்காலத் திட்டத் தொழிற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்களாகவும் இருக்க வேண் டும். பயிற்சி நெறியிலிருந்து பெறும் அறிவை தமக்குக் கீழ் கடமை யாற்றுவோருக்கு அறிக்கைகள், விரிவுரைகள், ஸ்தல பயிற்சி நெறிகள் ஆகியவை மூலம் பரப்புதற்கான வல்லமையையும் வாய்ப்புகளையும் கொண்டுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இப்பயிற்சி நெறி போதனை பாடங்களையும் செய்முறை வேலையையும் பல்வேறு முயற்சி நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிடுதல் ஆகியவற்றையும் கொண்டதாய் இருக்கும். பயிற்சித் திட்டம் பின்வருவன வற்றை உள்ளடக்கும் :—

புத்தகக் கைத்தொழில்

புத்தக வெளியீட்டுப் பொருளியல்

புத்தக உற்பத்தி

விற்பனைக் கருத்துகள்

மேம்படுத்தலும் விளம்பரமும்

விற்பனை அனுபவத்தை மதிப்பிடுதல்

நீள்காலத் திட்டம்

பிரசுரிப்பாளர்களின் முடிபுகள்

தொடர்புறு ஏனைய விடயங்கள்

இப்பயிற்சி நெறி ஒரு பட்டத்தையேனும் தகுதித் தேர்வுப் பத்திரத்தை யேனும் அளியாது. பயிற்சி நெறியை உரிய முறையில் பூர்த்தி செய்தபின் அதில் கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் வரவுச் சான்றி தழ் வழங்கப்படும்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக் கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1 : புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2 : சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

2. கால எல்லை.—இவ் இணையுரிமைப் பரிசில் 30.8.70 தொடக்கம் 26.9.70 வரையான கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரி களின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு யூனெஸ்கோ அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப் பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) புத்தகப் பிரசுரிப்பு மேலாண்மையில் இலங்கையில் முக்கிய பதவியில் முயற்சியுடன் ஈடுபடுபவராகவும் பயிற்சி நெறியை முடித்துக் கொண்டு இலங்கைக்கு திரும்பி வந்தபின் புத்தகப் பிரசுரிப்பு மேலாண்மையில் தொடர்ந்தும் முக்கிய இடத்தை வகிக்கக்கூடிய வாய்ப்பு உடையவராகவும் இருக்க வேண்டும். (மேலுள்ள 1 ஆம் பந்தியின் 3 ஆம் உபபந்தியையும் பார்க்கவும்).

(iii) ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும் (பயிற்சி நெறி ஆங்கிலத்திலேயே நடைபெறுமாதலால் விண்ணப்பதாரிகள் ஆங்கிலம் எழுத, வாசிக்கக் கூடியவர்களாகவும் விரிவுரைகளைக் கிரகிக்கக்கூடியவர்களாகவும் கலந்துரையாடல்களில் பங்குபற்றக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்).

(iv) பயிற்சி நெறிக்குப் போகமுன் புத்தகத் துறையில் தனது ஈடுபாடு களையும் இலங்கைப் புத்தகப் பிரசுரிப்புக் கைத்தொழில் பற்றியும் சுருக்கமான ஓர் அறிக்கை தயாரிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும். (இவ்வறிக்கை பயிற்சிநெறி ஆரம்ப காலத்தில் கூட்டத்தினருக்கு சமர்ப்பிக்கப்படும்).

**குறிப்பு 1 :** அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 30.8.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2 :** தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) சுற்றுப் பிரயாணச் செலவு.

(ஆ) உணவு, உறையகத்துக்கான செலவுகளைச் சமாளித்தற்கு நாளாந்த சகாயப்படி.

5. இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

6. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும், ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கவேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இந்தியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல் நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையாராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் சழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமைபற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்தாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைசசு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 11 ந் உ.

6-487—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை

### மருதானை, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தகப் பிரிவில் 1970/71 ஆம் கழகவாண்டில் மாணவர்களைச் சேர்த்தல்

பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல் தொடர்பில் 15.5.70 ஆந் திகதிய 14,906 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான கடைசித் திகதி 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிவரை நீடிக்கப்படுகிறது.

| | பயிற்சி நெறி | போதனுமொழி காலம் | நேரம் |
|---|---|---|---|
| (அ) | செயலாண்மைத் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி | .. ஆங்கிலம் 4 வருடங்கள் | .. பகல் முழுநேரமும் பின்னேரமும் |
| (ஆ) | செலவுக் கணக்கியல் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி | .. ஆங்கிலம் 3 வருடங்கள் | .. பகல் முழுநேரமும் பின்னேரமும் |
| (இ) | போக்குவரத்துத் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி | .. ஆங்கிலம் 4 வருடங்கள் | .. பின்னேரம் |
| (ஈ) | வங்கித் தொழில் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி | .. ஆங்கிலம் 3 வருடங்கள் | .. பின்னேரம் |

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 8 ந் உ.
6-380—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911.

எஸ். எல். த சில்வா,
பிரதி மகா வித்தியாதிபதி (தொழில்நுட்பக் கல்வி),
மகா வித்தியாதிபதிக்காக.

## மொறட்டுவை, கட்டுபெத்தை இலங்கைத் தொழில்நுட்பவியற் கல்லூரியில் 3 வருட தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்

1970/71 ஆம் பருவ காலத்தில் தொழில் நுட்பவியலாளருக்குரிய மூன்றாண்டு முழுநேரப் பகல் பயிற்சி நெறிக்கு (2 ஆண்டுகள் கல்லூரியிலும் ஓராண்டு கைத்தொழிலும்) இக்கல்லூரியில் சேர்வதற்குத் தகவுடைய அபேட்சகர்களிடமிருந்து இலங்கைத் தொழில் நுட்பவியற் கல்லூரியினால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. **தகவுத்திறன்**

(அ) **வயது :** அபேட்சகர்கள் 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ஆந் திகதியன்று 16 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 20 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

(ஆ) **கல்வித் தேவைகள் :** தூய கணிதம், பௌதிகம், ஒரு மொழி ஆகியவை உட்பட க. பொ. த. பத்திரப் பரீட்சையில், ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் இவற்றுள் குறைந்தபட்சம் விஞ்ஞான பாடங்கள் இரண்டு உட்பட 3 பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

3. இலங்கைத் தொழில் நுட்பவியற் கல்லூரியில் இரு பாலாரும் சேர்க்கப்படுவர்.

4. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவம் I க்கு அமைய விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரி படித்த/படிக்கும் மகா வித்தியாலய அல்லது தனிப்பட்ட உயர்தர பாடசாலை அதிபருக்கு, கீழ்க்காணும் 6 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதிக்குமுன் அதிபர்கள் அனுப்பி வைக்கும் பொருட்டுக் கூடிய விரைவில் அனுப்பப்பட வேண்டும். (அச்சிட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா).

தனிப்பட்ட அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களைத் தாம் கடைசியாகப் படித்த பாடசாலை அதிபர்மூலம் அனுப்ப வேண்டும்.

5. மகா வித்தியாலயங்களின் அல்லது தனிப்பட்ட உயர்தர பாடசாலைகளின் அதிபர்கள், தமக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களைச் சரிபார்த்த கீழே கொடுபட்டுள்ள II ஆம் படிவத்துக்கமைய ஓர் அட்டவணையைத் தயாரித்து, தொழில்நுட்பப் பயிற்சி நெறியைப் பின்பற்றுதற்கான மாணவரின் தகுதிபற்றி சிபார்சு செய்யவேண்டும். சிபார்சு செய்யும்பொழுது விண்ணப்பதாரியின் கல்வித் திறமையையும் அவர் பங்குபற்றிய வெளிமுயற்சிகளையும் கருத்திற்கொள்ள வேண்டும். (அச்சிட்ட படிவங்கள் வழங்கப்படமாட்டா).

6. அதிபர்கள் விண்ணப்பங்களையும், தமது சிபார்சையும் கொண்ட அட்டவணையையும் 9.7.1970 க்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக மொறட்டுவை, கட்டுபெத்தை, இலங்கைத் தொழிலநுட்பவியற் கல்லூரிப் பதிவாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். இத்திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. அபேட்சகர்களின் தெரிவு இலங்கைத் தொழில்நுட்பவியற் கல்லூரியால் நடத்தப்படும். எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

8. எந்திரவியல் பட்டப் பயிற்சி நெறிக்குச் சமனான 5 வருட தொழில்நுட்பவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியிலுள்ள முதலாவது 50 இடங்களும், இரு வருட தொழில் நுட்பவியல் பயிற்சி நெறியின் பின் இக்கல்லூரியிலும் ஊாடி சிரேட்ட தொழிலநுட்ப நிலையத்திலும் உள்ள மிகச்சிறந்த 50 மாணவர்களுக்கு க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகள் கணிக்கப்படாது, தொழில் நுட்பவியலாளர் இறுதிப் பரீட்சையில் விதிக்கப்படும் தரத்தை அடைவதற்கமைய, வழங்கப்படும். (குறித்த தரம் பின்னர் விதிக்கப்படும்.)

எல். எச். சுமனதாச,
பணிப்பாளர்.

இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி,
கட்டுபெத்தை, மொட்டுவை,
1970 ம் ௵ ஜூன் மீ 10 ந் உ.

**படிவம் I**

## மொறட்டுவை, கட்டுபெத்தை இலங்கைத் தொழில்நுட்பவியற் கல்லூரியில் 3 வருட பயிற்சி நெறியில் சேர்தற்கான விண்ணப்பம்

**குறிப்பு :** மேற்குறித்த அறிவித்தலில் கொடுபட்டுள்ள வயதுத் தகைமையையும் கல்வித் தேவைகளையும் பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)
2. அஞ்சல் முகவரி : ————.
3. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்).
4. 1.10.70 அன்று உள்ளபடி வயது :— வரு. : ————. மாதம் : ————. நாள் : ————.
5. சாதியம் : ————. 6. பால் : ————.
7. தகப்பனின் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் : ———— .
8. படித்த மகா வித்தியாலயத்தின் அல்லது தனிப்பட்ட உயர்தர பாடசாலையின் பெயரும் முகவரியும் : ————.
9. (அ) மேற்குறித்த அறிவித்தலின் 2 (ஆ) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப்பெற்ற க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சை வருடமும் மாதமும் : ————.
(ஆ) **சித்தி எய்திய பாடங்கள்**, பெறுபேறுடன் (சாதாரண சித்தி, திறமைச்சித்தி, விசேட சித்தி)

| **பாடங்கள்** | **பெறுபேறு** |
|---|---|
| 1. **தூய கணிதம்** | ................ |
| 2. பௌதிகவியல் | ................ |
| 3. மொழி | ................ |
| 4. ................ | ................ |
| 5. ................ | ................ |
| 6. ................ | ................ |

10. வெளி முயற்சிகள் : ————.

திகதி : ————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**படிவம் II**

விண்ணப்பங்களின் அட்டவணை

பாடசாலைப் பெயர் : .......................

| எண் | விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | பிறந்த திகதி | சித்தி எய்திய பாடங்கள், தரங்களுடன் | | | க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | கல்வித் திறமை | பாடசாலைத் தலைவரின் சிபார்சும் குறிப்புகளும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மொழி | விஞ்ஞானம் | ஏனைய | | | |
| | | | | | | | | |

அதிபரின் கையொப்பம் : .......................
திகதி : .........

6–462—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிடும் வேலை செய்வதற்காக அரசாங்க அதிபர் (யாழ். மாவட்டம்), செயலகம், யாழ்ப்பாணம் அவர்களால் 23.7.70 ம் திகதி பிற்பகல் 2.30 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்டும்.

**வேலை விபரம்**

(1) யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைச்சிப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள வெலிக் கண்டலுக்கு உட்செல்லும் பாதைக்கு கிறவல் இடுதல்.

(2) யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைச்சிப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டத்திற்கு உட்செல்லும் பாதையின் திருத்த வேலைகள்.

(3) யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள வசந்தபுரம் கிராம விஸ்தரிப்புத் திட்டத்திற்குட்செல்லும் வீதி அமைத்தல்.

2. மேலே குறிப்பிட்ட வேலை விபரத்திற்கு எதிராகக் குறிப்பிட்ட அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு அரசாங்க திணைக்களங்களில் ஒப்பந்தக்காரராகப் பதியப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும், கிராமாபிவிருத்திச் சங்கங்களுக்கும், யாழ்ப்பாணக் கச்சேரி காணிக்கிளையிலிருந்து 16.7.70 ம் திகதி பிற்பகல் 3.00 மணிவரைக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்கள் தமது ஒப்பந்தப் பதிவு பற்றிய அத்தாட்சிப்பத்திரங்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திர வைப்புப் பணமாகச் செலுத்தப்பெற்ற ரூபா 25 க்குப் பெறுமதியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்ததன் பின் செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பத்திர வைப்புப்பணம், பிணையாகச்செலுத்தும் வைப்புப் பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாறுயினும் மேல் கூறப்பட்டுள்ள சமர்ப்பணத்தைக் கொண்டே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்கள், பதிவுசெய்யப்பட்ட அஞ்சல் மூலம் அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்டல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப்பெற்ற தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் பதியப்பட்ட தபாலில் அனுப்பாதுவிடின் அது யாழ்ப்பாண செயலகத்திலுள்ள அலுவலக உதவியாளர் அறையில் இதற்கென வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் கேள்விப் பத்திர முடிவுத் திகதியன்றே அல்லது அதற்கு முன்னதாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குப் பின்பு கிடைக்கப் பெறும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொண்டபின்பு மேற்கூறப்பட்ட விலாசத்தில் வைத்து அவை திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர், கேள்விப்பத்திரங்கள் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாய் இருத்தல் வேண்டும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாத அல்லது வெளிப்படுத்தாத அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தல் கிடைத்து 10 நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ள பிணைப் பணத்தைச் செலுத்தாவிடின் செலுத்தப்பெற்ற கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

8. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரர் ஒப்பந்த வேலையை சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரஜைகளாகவே இருத்தல் வேண்டும், அத்தகைய வேலையாட்கள் கூடுமானவரை வேலைத்தலத்திற்கு அருகாமையில் இருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதி கோரப்பட்ட தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியிலிருந்து (3) மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவர்.

10. இவ்வேலை பற்றிய மேலும் ஏதேனும் தகவல் அறியவிரும்பின் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

11. குற்றப்பட்ட ஒப்பந்தக்காரர் பட்டியலிலுள்ளவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம் எவ்வித கேள்விகளுக்கு இடமின்றி இவ்வறிவித்தலிலுள்ள ஒரு பகுதியையோ அல்லது முழுப் பகுதியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளார்.

13. கேள்விப்பத்திரக்காரர்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரம் திறந்த திகதியிலிருந்து ஒரு மாதகாலம் வரையும் அமுலில் இருப்பதாகக் கருதப்படும்.

கே. பொன்னம்பலம்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக்கிளை, செயலகம்,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆடு ஜூன் மீ 10 ந் உ.

6–493—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

எனது இல. எல்டபிள்யூ/2/26

## கேள்வி அறிவித்தல்

அரசாங்கத்தில் ரூ. 15,000 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள தனிப்பட்ட கொந்திருத்துக்காரர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து கீழ்க்காணும் வேலைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளையோ செய்வதற்கான கேள்விகள், 1970 ம் ஆண்டு ஆடி மாதம் 5 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை புத்தளம் கச்சேரி கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப் படும்.

1. பொதுக்கிணறு— நாத்தாண்டிய, அக்கரஅருவ, தப்பொலவில்
2. ஷை — நாகாகட்டுவ கி. வி. திட்டத்தில்
3. ஷை — பாலுவத்தை கி. வி. திட்டத்தில்
4. ஷை — மட்டாக்கொட்டுவ கடற்கரையில் மீ. இ. திட்டத்தில்
5. ஷை — தல்வில மீ. இ. திட்டத்தில்
6. ஷை — பகலகட்டுநேரிய மீ. இ. திட்டத்தில்
7. ஷை — நெபடககாயாய கி. வி. திட்டத்தில்
8. ஷை — தொடுவாவ மீ. இலாகாத் திட்டத்தில்
9. ஷை — பொத்துக்குளம்–கலுகெல்ல, நிக்கவெறடிய தேர்தல் தொகுதியில்
10. ஷை — சேருக்கெலே–முதலக்குளியாவில்
11. பொதுக்கிணறு— வேண்டகடுவ–பல்லமவில்
12. ஷை — கல்குளிய மத்திய வகுப்பினர் காணித்திட்டத்தில்
13. ஷை — அம்பக்கெலே கி. வி. திட்டம், சிலாபத்தில்
14. ஷை — அத்தங்கனே கி. வி. திட்டத்தில்
15. ஷை — வெட்டாளை கி. வி. திட்டத்தில்
16. லொறி கராஜ் — புத்தளக் கச்சேரி மைதானத்தில்

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக் கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே மேலே கூறப்பட்ட ஒவ்வொரு வேலைகட்கும் தனித் தனியாக இவ்விரு பிரதிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். புத்தளம் கச்சேரியில் ரூபா 25 வைப்புப் பணமாகக் கட்டிய பற்றுச் சீட்டைக் காண்பித்தே மேற்கூறிய ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப் பத்திரம் பெறமுடியும். கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆடி மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள் புத்தளம் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படலாம். இன்றேல் பதிவுத் தபால் மூலம் தலைவர், கேள்விச சபை, கச்சேரி, புத்தளம் என்ற முகவரிக்கு அனுப்பபபடல் வேண்டும்.

எம். டபிள்யூ. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி, புத்தளம்,
1970 ம் ஆண்டு ஆனி மீ 9 ந் ௳.

6–494—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## நீர்ப்பாசன இலாகா

### பொலன்னறுவ உபபிரிவு

பொலன்னறுவ உபபிரிவில் கனிஷ்ட உத்தியோகத்தரின் விடுதி அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், பொலன்னறுவையிலுள்ள வட கீழ்ப்பாக பெரும்பாக பொறியியலாளரால் 1970 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 5 ஆம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்னர் உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 25,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராமாபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய கேள்விப் பத்திரங்கள் கவுடுல்ல/மின்னேரிய/பொலன்னறுவயிலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி பி. ப. 4.30 மணி வரைக்கும் பெறக்கூடிய பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன், மேற்குறித்த ஏதாவதொரு பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் கட்டி பற்றுச்சீட்டு காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் பொலன்னறுவயிலுள்ள பொலன்னறுவ உபபிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்

ம. யோகரானந்தன்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
பொலன்னறுவ உபபிரிவு.

நீர்ப்பாசன இலாகா,
பொலன்னறுவ,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 8 ந் ௳.

6–467—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோர்

கொழும்பு 2, 48 ஸ்ரீ ஜினரத்தின வீதி பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோர் ஆணையாளரிடம் இருந்து 100 நீண்ட தொன் “ சேர்கன் ” ( Zircon ) வாங்குவதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18 ம் திகதி பிற்பகல் 2 மணி வரை கோரப்படுகின்றன.

இக்கேள்விக்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோர் ஆணையாளரிடம் இருந்து 1970 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விக்கட்டணமாக ரூபா 25 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இக்கேள்வி விண்ணப்பத்திற்குரிய நிபந்தனைகள் அடங்கிய முழு விபரங்களையும் அதாவது தராதரப் பரிசீலனைகள், கட்டி அனுப்பும் முறைகள் போன்றவற்றை பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோர் ஆணையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எல். ஜே. டீ. பர்ணாந்து,
பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோர் ஆணையாளர்.

பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோர்,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 1 ந் ௳.

6–363—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911.

---

## அஞ்சல் தந்தி திணைக்களம்

### ஆறு பாவனைக்குதவாத மோட்டார் வாகனங்களை விற்பதற்கான கேள்விப் பத்திரங்கள்

மருதானையிலுள்ள அஞ்சற்றந்தித் தொலை பேசிப் போக்குவரத்துப் பண்டகசாலையில், தந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பிரிவில் இருக்கும் பாவனைக்குதவாத ஆறு (6) மோட்டார் வாகனங்கள் விற்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், 5 வது மாடி, பிரதான தந்தித் தொலைபேசிப் போக்குவரத்து பொறியியலாளரின் அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திர சபைத் தலைவரால் 1970 ஜூலை 9 ஆம் திகதி மு. ப. 10.0 மணிவரை ஏற்றுக்கொள்ளப் படும்.

2. கொழும்பு 1, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், 5 வது மாடி, பிரதான தந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பொறியியலாளரின

அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட படிவங்களில், இணைப்படியில் கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். மருதானை, அஞ்சற்றந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பண்டசாலையிலுள்ள போக்குவரத்து உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு இப்பாவணைக்குதவாத மோட்டார் வாகனங்களைப் பார்வையிடலாம்.

3. கொழும்பு 1, மத்திய தந்தி அலுவலகம் தந்திக்காசாளரிடம் அல்லது எந்த அஞ்சல் அலுவலக அஞ்சல் அதிபரிடம் கேள்விப் பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினை பிரதான தந்தித்தொலைபேசிப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரருக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் ஜூலை 5,1970 ஆம் திகதி ந. ப. 12 மணி வரை வழங்கப்படும்.

வி. அளகரத்தினம்,
பிரதான தந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பொறியியலாளர்.

அஞ்சல் தந்தித் தொலைபேசிப் போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிடம்,
லோட்டஸ் ரோட்,
கொழும்பு 1.

6–496—18.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## பரீட்சைப் பகுதி

### பயன்படுத்தப்பட்ட முத்திரைகளின் விற்பனை

5 சத முத்திரைகள் தொடக்கம் 60 சத முத்திரைகள் வரையுள்ள பல இனங்களைச் சேர்ந்த பெருந்தொகையான பயன்படுத்தப்பட்ட முத்திரைகள், கொழும்பு 2, மலே வீதியில் உள்ள பரீட்சைப் பகுதியில் விற்பனைக்குள்ளன. இவற்றை வாங்க விரும்புபவர்கள் 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ம் திகதி தொடக்கம் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி வரை மேற்படி அலுவலகத்தில் அவற்றை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

2. இம்முத்திரைகளை வாங்குவதற்கான கூறு விலைகள் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பதாக இப்பகுதியிற் கிடைக்கும் வண்ணம் சீல் இடப்பட்ட உறையினுள் வைத்துப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். வெளி உறையின் இடதுபக்க மேல் மூலையில் "S. O. V. S." என்ற எழுத்துக்கள் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

3. கூறு விலைகளைச் சமர்ப்பித்தவர்கள் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி பி. ப. 3.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரசன்னமாயிருக்கலாம். அந்நேரத்திலேயே சீல் இடப்பட்ட கூறு விலைகள் திறக்கப்படும்.

4. சித்தி பெறும் கேள்வியாளர் வழங்கலை ஏற்றுக் கொண்ட மூன்று நாட்களுக்குள் பணத்தைச் செலுத்தி முத்திரைகளை எடுத்துச் செல்லும்படி கேட்கப்படுவர்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 8 ந உ.

6–390—18.6.70 திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## விற்பனை விருத்தித் திணைக்களம்

### தகரத் தகடுகளாலான டப்பாக்கள் வழங்குதல்

22.5.70 ல் வெளியிடப்பட்ட 14,907 இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் மேற்கூறிய வினியோகத்திற்கான கேள்விப்பத்திர முடிவு திகதி 1970 யூலை 6 ம் திகதி திங்கட்கிழமைவரை நீடிக்கப்பட்டிருப்பதை இக்கேள்விப் பத்திரம் கோரவிருப்போர் தயவு செய்து அவதானிக்கவும்.

கொழும்பு,
9.6.1970.

கே. பி. திசனாயகா,
விற்பனை விருத்தித் திணைக்கள ஆணையாளர்.

6–430—18.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## அஞ்சல் தந்தி தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களம்

கீழ் கூறப்பட்டுள்ள வேலையைச் செய்வதற்கான கேள்விப்பத்திரம், 1970 யூலை 10 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை கொழும்பு 1, அஞ்சல் தந்தி தொலைசெய்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகத்திலுள்ள அஞ்சல் தந்தி தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மேலதிகப் பகுதிக் கேள்விச் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) நீர்கொழும்பு அஞ்சல் அலுவலகம், அஞ்சல் அதிபரின் மனை, மேற்பார்வை உத்தியோகத்தரின் மனை ஆகியவற்றிலுள்ள எழுவாளி மல கூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்றுதல்.

2. ரூபா 10,000 அல்லது அதற்குக் கூடுதலாகச் செலவு ஏற்படும் கட்டிடங்களின் வேலைகளைச் செய்வதற்கு அரசாங்கத்துடன் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் இவ்வேலையைச் செய்வதற்குமனுப்பண்ணுவதற்கு தகுதியுடையவர்களாவார்.

3. எவ்வஞ்சல் அலுவலகத்திலும் கேள்விப்பத்திர கட்டுப்பணமாக ரூபா 25 ஐக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கு அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சர் (மேற்கு-வடக்கு) கேள்விப்பத்திரப்படிவங்களை வழங்குவார். 1970 யூன் 15 ம் திகதி தொடக்கம் யூலை 5 ம் திகதி பி. ப. 4.30 மணிவரை கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. இரட்டைப் பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைத் தயாரித்து, உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்றுவதற்கான கேள்விப்பத்திரம், நீர்கொழும்பு அஞ்சல் அலுவலகம்" என விளக்கமாகக் குறிப்பிட்டு, தலைவர், மேலதிகப் பகுதிக் கேள்விச்சபை, அஞ்சல் தந்தி தொலைசெய்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகம், கொழும்பு 1 என முகவரியிட்டு பதிவுக் கடிதமூலம் அனுப்புதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரத்தில் அழித்தல், வெட்டுதல், மாற்றம் செய்யப்பட்டிருந்தால் அவற்றுக்கு எதிராக கேள்விப்பத்திரக்காரர் தனது முதலெழுத்துக்களை இடுதல் வேண்டும்.

6. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரின் (மேற்கு-வடக்கு) அலுவலகத்திலிருந்து தேவையான விவரக் கூற்றுகளையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்தி தொலை செய்திப் போக்குவரத்து அதிபரும்.

அஞ்சல் தந்தி தொலை செய்திப் போக்குவரத்து தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

6–452—18.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,911

## கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிடும் வேலை செய்வதற்காக கொழும்பு த. பெ. இல. 500, காணி ஆணையாளரின் திணைக்களத்துக் கேள்விச் சபைத் தலைவரால் 20.7.70 ந் திகதி பிற்பகல் 2.30 மணி வரை யும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | | வேண்டப்படும் பதிவுத்தொகை ரூபா |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைச்சி பிரிவுக் காரியாதிகாரி யின் பிரிவிலுள்ள ஜெயந்தி நகர் கிராம விஸ்தரிப்புத் திட்ட வீதிக்கு மணபோட்டு கிறவல் இடுதல் (சுமார் 2½ மைல் நீளமான பாதை—15,431′ "0") | .. | 15,000 |

2. மேலே குறிப்பிட்ட வேலை விபரத்திற்கு எதிராகக் குறிப்பிட்ட அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு அரசாங்க திணைக்களங்களில் ஒப்பந்தக்காரராகப் பதியப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கும் தொழிலாளர் சங்கங்களுக்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கிராமாபிவிருத்திச் சங்கங்களுக்கும், யாழ்ப்பாணக் கச்சேரி, காணிக் கிளையிலிருந்து 14.7.70 ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரைக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தக் காரர்கள் தமது ஒப்பந்தப்பதிவைப் பற்றிய அத்தாட்சிப் பத்திரங்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. கேள்விப் பத்திர வைப்புப்பணமாகச் செலுத்தப்பெற்ற ரூபா 50/க்குப் பெறுமதியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரத் துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்த தன் பின், செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல வேண்டும். அனுமதிக் கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம், பிணையாகச் செலுத் தும் வைப்புப்பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாறுயினும் மேல் கூறப்பட்டுள்ள பதிவின் சமர்ப்பணத்தைக் கொண்டே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப் பத்திரங்கள், பதிவு செய்யப் பட்ட அஞ்சல் மூலம், கேள்விச்சபைத் தலைவர், காணி ஆணையாளர் திணைக்களம், த. பெ. இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப்பெற்ற தபால் உறையின் இடதுபக்க மேல் உறையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் பதியப்பட்ட தபாலில் அனுப்பப்படாது விடின், அது கொழும்பு 1, காலிமுகச் செயலகத்தில் உள்ள 357 ம் இலக்க அறையில் இதற்கென வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டி யில் கேள்விப்பத்திர முடிவுத் திகதியன்றே அல்லது அதற்கு முன்ன தாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குப் பின்பு கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொண்டபின்பு மேற்கூறப்பட்ட விலாசத்தில் வைத்து அவை திறக்கப்படும் கேள்விப் பத்திரக்காரர், கேள்விப் பத்திரங்கள் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாது அல்லது வெளிப்படுத்தாது அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறி வித்தல் கிடைத்து 10 நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ள பிணைப் பணத்தைச் செலுத்தாதுவிடின் செலுத்தப்பெற்ற கேள்விப்பத்திர வைப் புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

8. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரர் ஒப்பந்த வேலையை சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரசைகளாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வேலையாட்கள் கூடுமானவரை வேலைத்தலத்திற்கு அருகா மையில் இருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதி கோரப்பட்ட தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியி லிருந்து (3) மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

10. இவ்வேலை பற்றிய மேலும் ஏதேனும் தகவல் அறியவிரும்பின் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

11. குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர் பட்டியலிலுள்ளவர்களிடமிருந்து கேள் விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. காணி ஆணையாளர் எவ்வித கேள்விகளுக்கு இடமின்றி இவ் வறிவித்தலிலுள்ள ஒரு பகுதியையோ அல்லது முழுப் பகுதியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளார்.

13. கேள்விப்பத்திரக்காரர்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறந்த திகதியிலிருந்து ஒரு மாதகாலம் வரையும் அமுலில் இருப்ப தாகக் கருதப்படும்.

கே. பொன்னம்பலம்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக் கிளை,
செயலகம்,
யாழ்ப்பாணம்,
1970 ஆண்டு ஜூன் மாதம் 2 ந்திகதி

6–392—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் திற்கு பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன :

1. 500 நீள் தொன் நீர் நீக்கப் பெற்ற சுண்ணும்பு கேள்விப்பத்திரங் கள் 1970 ஆகஸ்ட் 20 ந் திகதி மூடப்படும்.
2. 400 நீள் தொன் கந்தகம் கேள்விப்பத்திரங்கள் 1970 ஆகஸ்ட் 29 ந் திகதி மூடப்படும்.

கேள்விப்பத்திரப் படிவங்களும் மற்றும் ஏனைய விபரங்களும் பொறுப்பு முதல்வர்கள்/வழங்குபவர்களின் பெயர் மற்றும் விலாசம் ஆகியவற்றைக் கொடுத்து விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு–2,
2.6.70.

6–435/1—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### விநியோகஸ்தர்களைப் பதிவுசெய்தல்

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்து கொள்ளவிரும்பும் உள்ளூர் விநியோகஸ்த்தர்களிடமிருந்து பதிவுத் தபாலிலான விண்ணப்பங்கள் 1970ம் ஆண்டு யூலை மாதம் 1 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பொது முகாமையாளர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. எழுதுகருவியும் மற்றும் காரியாலய உபகரணங்களும்.
2. அச்சிடும் படிவங்கள் முதலியன.
3. கருவிகள் மற்றும் குளாயப் பொருந்திகள் ஆகியவை உட்பட உலோகப் பொருட்கள்.
4. மோட்டார் மற்றும் இயந்திர உதிரியுறுப்புக்கள்.
5. ரயர்களும், ரியூப்களும், மற்றும் பற்றறிகளும்.
6. இரசாயனப் பொருட்கள்.
7. மின்சாரப் பொருட்கள்
8. காரியாலய மற்றும் வீட்டுத் தளபாடம்
9. வீட்டுச் சில்லறைத் துணிமணி (துவாய்கள், திரைச்சேலைகள் கம்பளம் முதலியன)
10. மருந்து வகைகள் முதலியன
11. தீந்தைகள் நிலத் தேய்ப்புப் பொருள் வாணிசு முதலியன
12. சீருடை முதலியன தைத்தல்
13. மரப் பொருட்கள்
14. பலவினப் பொருட்கள்.

ஒரு பொருளிற்கு மேல் வழங்குவதற்கு தங்களைப் பதிவு செய்ய விரும்பும் விநியோகஸ்த்தர்கள் ஒவ்வொரு பொருளிற்கும் வெவ்வேறான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள். பதிவுசெய்யப்பட்டுள்ள விநியோகஸ்தர்கள் பட்டியலிலிருந்துதான் வழக்கமாக கூறுவிலைகள் கோரப்படும். ஆனால் வேறும் விநியோகஸ் தர்களிடமிருந்தும் கூறுவிலைகளை கோருவதற்கு கூட்டுத்தாபனத்திற்கும் உரிமையுண்டு. கூறுவிலைகளுக்குப் பதிலிறுக்காத அல்லது கூறுவிலைகளை சமர்ப்பித்த பின்பு பொருட்களை வழங்குவதில் தவறு செய்யும் விநி யோகஸ்தர்கள் விநியோகஸ்த்தர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இக் காரியாலயத்தின் காரியாலய நேரங்களில் விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு–2,
1970, யூன் 1 ந் திகதி.

தி. ப. நாரன்பனுவ.
பொது முகாமையாளர்.
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

6–435/2—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### பகிரங்க ஏல விற்பனை

1970.6.28 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் கொழும்பு 7, பௌத்த லோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 4வது மாடியில் சுமார் 200 ருத்தல் பழைய புதினப்பத்திரிகைகளும் சுமார் 100 ருத்தல் பழைய வர்த்தமானிகளும் ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய தொகையில் கேட்பவர்கள் பத்திரிகைகள் வர்த்தமானிகள் முழுவதையும் வாங்கவேண்டும். அதே இடத்தில் பணத்தைச் செலுத்தி உடனடியாகப் பத்திரிகைகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இப் பழைய புதினப்பத்திரிகைகளும் வர்த்தமானிகளும் ஏல விற்பனை நாளன்று காலை 9.30 மணி தொடக்கம் 10.00 மணிவரை ஏலத்தில் விற்பனை கோருபவர்களுக்கெனப் பார்வைக்கு வைக்கப்படும்.

பி. காசிலிங்கம்,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு–7, 8.6.1970.

6–427—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

## கடற்றொழில் திணைக்களம்

### பாவனைக்குதவாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

1970.5.29 ந் தேதிய 14,908 இலக்க அரசாங்க வர்த்தமானி பக்கம் 481 இல் பிரசுரிக்கப்பட்ட மேற்கண்ட வர்த்தமானி அறிவிப்புச் சார்பாக, ஏல விற்பனையின் திகதியும் நேரமும் 1970.7.6 ந் தேதி காலை 10 மணிக்கு என்றும், முன்பு குறிப்பிட்டதுபோல் 1970.6.14 ந் தேதியல்ல எனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
காலிமுகம்,
கொழும்பு 3, ஜூன் 7, 1970.

6–391—18.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,911

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் .. | 3.4.70 | வெள்ளி .. | 25.3.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி .. | 3.4.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி .. | 8.4.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி .. | 17.4.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் .. | 23.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| மே .. | 8.5.70 | வெள்ளி .. | 30.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி .. | 8.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி .. | 15.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி .. | 22.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| யூன் .. | 5.6.70 | வெள்ளி .. | 29.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் .. | 5.6.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் .. | 11.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் .. | 18.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் வ.

அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.